**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST & SESSIONS COURT (PCR), MADURAI.**
**Sessions Case No. 31/2019**
**Deposition of witness for CW. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கணேஷ்குமார் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th April 2021.

17.04.2021
**விசாரணை ஆரம்பித்த நேரம் 11.15 மணி**
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு நீதிமன்ற கேள்விகள் குறித்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நேரடியாக சம்மன் வரவில்லை, என் அலுவலகத்திகத்தில் இருந்து எனக்கு கோர்ட் சம்மன் அனுப்பி வைத்தார்கள். நான் பணிபுரியும் தொலைக்காட்சியின் செய்தி பிரிவின் தலைமை ஆசிரியர் எனக்கு அனுப்பி வைத்தார். சென்னையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. நான் அழைப்பாணையை படித்துப்பார்த்தேன். நான் சம்மனில் கையெழுத்திடவில்லை. சம்மன் அலுவலகத்தில் யாரால் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்மனின் நகல்தான் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனக்கு அனுப்பப்பட்ட அந்த சம்மனை தாக்கல் செய்துள்ளேன். அது நீசாஆ 10 ஆகும். அதை நான் படித்துப்பார்த்தேன். நான் பணிபுரியும் அலுவலகம் மதுரையில் உள்ளது. புதிய தலைமுறை தொலைக்காட்சியின் நிறுவனர் இந்திய ஜனநாயக கட்சியை நடத்தி வருகிறார் என்று சொன்னால் அவர் மகன் சத்தியநாராயணன் தான் நடத்தி வருகிறார். சத்திய நாராணயன் SRM Group இல் ஒரு உறுப்பினர். மேற்படி தொலைக்காட்சி நிறுவனத்தினர் புதுயுகம், வேந்தர் டிவி என்ற தொலைக்காட்சிகளையும் நடத்தி வருகிறார். நான் 2014 ஆம் ஆண்டு புதிய தலைமுறை தொலைக்காட்சியில் பணிக்கு சேர்ந்தேன். எங்களுடைய 10.10.15 தேதிய நிகழ்ச்சி சம்மந்தமான சிடியில் கால அளவு இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே வலது மூலையில் 08:01 p.m என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கீழே 10.10.15 ம் தேதி என குறிப்பிடப்பட்டு கால அளவு ஓடுகிறது. நிகழ்ச்சி நிறைவடைந்த பிறகு அதை டவுண்லோடு செய்யும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி, நேரம் பதிவாகும். நேரடி நிகழ்ச்சி முடிந்தபிறகு அதனை கணிணியில் பதிவு செய்தார்கள். அந்த கணிணியில் இருந்து இந்த சிடி எடுக்கப்பட்டது. மேற்படி பதிவுகள் பச்சைமுத்துவின் தூண்டுதலின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சிடி இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்11.40 மணி.**

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com